## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 602/2022**

திருமதி. சுமதி (P.W. –1) **23.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. 2017 ஆம் வருடம் என்னுடைய அப்பா இறப்பதற்கு முன்பு அவருடைய உடல்நிலை 2017 ஆம் வருட முதல் சரியில்லாமல் இருந்து வந்தது என்றால் தவறு. 2017 ஆம் வருடம் என் தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் திருப்பூர் குமரன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் ஆமாம். உள் நோயாளியாக குமரன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரி. அவருடைய மருத்துவச் செலவுகளை முதல் பிரதிவாதி தான் செய்தார் என்றால் தவறு. நாங்களும் செய்வோம் அதற்கு பணம் நான் கொடுத்துள்ளேன். அவ்வாறு செலவு செய்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் பணம் கொடுத்துள்ளோம். அதை முதல் பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ளார்.

2. என்னுடைய பெற்றோர் உடல் நிலை சரியில்லாமல் இருந்தபோது முதல் பிரதிவாதி தான் எல்லா செலவுகளையும் செய்து பராமரித்தார் என்றால் தவறு. எங்களிடம் பணம் பெற்றுக் கொண்டார் ஆனால் அதற்கு பணம் கொடுக்கவில்லை. என்னுடைய பெற்றோரை முதல் பிரதிவாதி கடைசி வரை பராமரித்து வந்ததால் தான் தாவா சொத்தை முதல் பிரதிவாதிக்கு என்னுடைய பெற்றோர் தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியபடுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் தவறு. நாங்கள் தான் பார்த்து வந்தோம் என்னுடைய பெற்றோர் வெளியில் தான் இருந்தார்கள். முதலில் பேத்தி பேரில் தான செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எந்த தேதியில் என்னுடைய பெற்றோர் பேத்தி பெயரில் சொத்துக்களை தான செட்டில்மெண்ட் செய்தார்கள் என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். என்னுடைய பெற்றோர்

பேத்திகள் பெயரில் தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திய நானும் செட்டில்மெண்ட் ஆவணம் மோசடியானது அமலுக்கு வரவில்லை என்றால் தவறு.

3. தான செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் என்னுடைய சகோதரி மற்றும் அவருடைய கணவர் என் பெற்றோரிடமிருந்து மோசடியாக பெற்றுள்ளோம் என்றால் தவறு. என்னுடைய பெற்றோர்கள் எந்த மறுப்பும் இதுவரை சொல்லவில்லை. தாவா சொத்தின் முதல் மாடியில் நான் தேன்மொழியின் மகள்களுடன் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். தேன்மொழி அவருடைய கணவரான முதல் பிரதிவாதி மீது என்ன வழக்குகள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரியும் அதை மறைத்து தற்சமயம் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

4. இதே சொத்துக்களை பொறுத்து தேன்மொழியின் மகள்கள் திருப்பூர் முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 715/2022 பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. அந்த விவரங்கள் எல்லாம் தெரியும் தற்சமயம் அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை கேட்டு தேன்மொழியின் மகள்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கில் அவர்கள் அவசிய தரப்பினார்கள் என்றால் சரியல்ல. தாவா அவசிய தரப்பினர்கள் சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் தவறு. நான் என்னுடைய தாத்தா சொத்தில் பொறுத்து பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

5. தாவா சொத்து என்னுடைய பாட்டனாரின் சொத்து இல்லை. என்னுடைய தகப்பனாரின் சுயாஜித சொத்து என்றால் தவறு. தாத்தாவுடைய சொத்து. என்னுடைய தாயார் உயிருடன் இருந்த சமயத்தில் அவருக்கு நானும் என்னுடைய மகள் இடைஞ்சல் செய்து வருவதாக மாவட்ட ஆட்சியரிடம் அவர் ஒரு மனு கொடுத்து இருந்தார் என்றால் தெரியாது நான் செல்லவில்லை. அந்த புகார் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு விசாரணை நடந்தது என்றால் தெரியாது. நான் எந்த விசாரணைக்கும் செல்லவில்லை. என்னுடைய பெற்றோர் காவல் ஆணையாளரிடம்

நாங்கள் வெற்று காகிதங்களில் கையொப்பம் பெற்றுள்ளதாக சொல்லி ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் தவறு புகாரின் பேரில் விசாரணை நடந்தது என்றால் தவறு. நான் எந்த விசாரணைக்கும் செல்லவில்லை. என்னுடைய பெற்றோர் உயிருடன் இருந்த சமயத்தில் எந்த விவரங்களும் சொல்லாமல் முதல் பிரதிவாதி பெயரில் பொய் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

6. என்னுடைய தகப்பனாரை ஏமாற்றி முதல் பிரதிவாதி ஆவணங்கள் ஏற்படுத்தியதால் அவரே காவல் நிலையம் சென்றார். புகார் எதுவும் கொடுக்கவில்லை அதற்கு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.தாவா சொத்தைப் பொறுத்து என்னுடைய பெற்றோர் முதல் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தி உள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று நீதிமன்றத்தில் இன்றுவரை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எனக்கு பிரச்சனை இருந்ததால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லை. தான செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று நடவடிக்கை எடுக்காமல் தாவா சொத்தில் நான் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரி. இதற்கு மேல் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

7. தாவா சொத்தில் எந்த பாக உரிமையும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளதால் என்னுடைய பாகம் அற்றுப் போய் விட்டதாக கருத வேண்டும் என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.23 15:23:18 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.